# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364147

1. District : Salem PS: VAAC Year: 2026 FIR No.: 8/AC/2026 Date: 19.06.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a) and 7A

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 1) 17.06.2026 2) 18.06.2026

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS, Date : 19.06.2026 Time : 15.00hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 19.06.2026 Time : 15.00hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 6Kms. West
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : Regional transport office, Salem west
முறைக் காவல் எண் முகவரி Kandampatty by-pass, Salem

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name: Tr. P. Singaravelan (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address Taluk office, Salem west, Salem.
தொழில் Deputy Thasildar (Elections) முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tmt. P. Jeyanthi, Motor vehicle Inspector (GI), RTO, Salem west, Salem
2) Tr. C. Sudharsan, a Private Individual (broker)
3) Tr. M. Venkatesh, a Private Individual (broker)
4) Tr. Ranjith, a Private Individual (broker)

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperat sheet herewith enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. Murugan 19.6.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

19.06.2026 at 19.00hrs

Name: பெயர் D. D. Ravikumar
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police
Vth Tr, Salem

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 08/AC/2026 u/s Sec 7 (a) and 7 A of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 ன் கிழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12ன் விபரம்

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 19.06.2026 ஆம் தேதி மதியம் 15.00 மணிக்கு சேலம், மாவட்டம், சேலம் மேற்கு வட்டாட்சியர் அலுவலகம், துணை வட்டாட்சியர் (தேர்தல்) திரு.பி.சிங்காரவேலன் துணை ஆய்வுக்குழு அலுவலர் சேலம் Incharge Deputy Inspection cell officer என்பவர் சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பினவருமாறு: அனுப்புநர்:திரு.பி.சிங்காரவேலன், துணை வட்டாட்சியர் (தேர்தல்), சேலம் மேற்கு வட்டாட்சியர் அலுவலகம், சேலம். பெறுதல்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,சேலம். ஐயா, சேலம் மாநகரம் கந்தம்பட்டியில் இயங்கி வரும் சேலம் மேற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.பி.ஜெயந்தி அவர்கள் தனது பதவியை தவறாகப் பயன்படுத்தி அங்குள்ள தனிநபர் புரோக்கர்கள் மூலம் சேலம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து அனுமதி சான்று வழங்குதல், பன்னாட்டு ஓட்டுநர் உரிமம், உரிமம் ரத்து செய்வது, பொதுப்பணி வில்லை வழங்குதல் ஆகியவற்றிற்காக வரும் வாகன உரிமையாளர்கள் மற்றும் பொது மக்களிடம் லஞ்சமாக பணம் கேட்டு வசூலிப்பதாகவும், புரோக்கர்கள் அலுவலக பதிவேடுகளை கையாண்டு மேற்படி தொகைகளை வசூலித்து வருவதாகவும் நேற்று 18.06.2026 ஆம் தேதி பகல் சுமார் 10.45 மணிக்கு கிடைக்கப்பெற்ற நம்பத்தகுந்த ரகசிய தகவல் கிடைத்ததாவும். இது தொடர்பாக அந்த அலுவலகத்தை ஒரு திடீர் தணிக்கை செய்யும்பொருட்டு சேலம் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் ளிநஉயைட னுநிரவல ஐஊழு நிலையில் ஒரு அலுவலரும் உதவியாக ஒரு அலுவலரும் நியமிக்க காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு சேலம் அவர்கள் கேட்டுகொண்டத்தின் படி திரு.பி.சிங்காரவேலன், துணை வட்டாட்சியர் (தேர்தல்), சேலம் மேற்கு வட்டாட்சியர் அலுவலகம், சேலம் மற்றும் திரு.த.கிருத்திவாசன், மண்டல துணை வட்டாட்சியர், சேலம் மேற்கு வட்டாட்சியர் அலுவலகம், சேலம் ஆகிய எங்களை நியமித்ததின் பேரில் பகல் சுமார் 11.30 மணியளவில் சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்தோம். எங்கள் இருவரிடமும் திரு.R.D. ரவிகுமார் காவல் ஆய்வாளர் அவர்கள் சேலம் மாநகரம் கந்தம்பட்டியில் இயங்கி வரும் சேலம் மேற்கு வட்டாரப்

போக்குவரத்து அலுவலகத்தினை திடீர் தணிக்கை செய்யப்போகும் விவரத்தை விளக்கி சொன்னார். பிறகு காவலர்கள் அடங்கிய குழுவினர்களுடன் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து மதியம் 11.30 மணிக்கு புறப்பட்டு சுமார் 12.00 மணிக்கு காவல் ஆய்வாளர் திரு.சு.னு.ரவிக்குமார், எங்களின் மற்றும் காவலர்களுடன் இணைந்து மேற்படி அலுவலகத்தினை திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது திருமதி.வ.கோகிலா அவர்கள் அலுவலகத்தில் அவரது அலுவலக பணியை கவனித்து கொண்டிருந்தார். அவரிடம் திடீர் சோதனைக்காக வந்த விபரத்தை கூறி திடீர் தணிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அவாது அறையை எங்கள் முன்னிலையில் சோதனை செய்து அவரிடம் இருந்த தொகைகள் குறித்து கேட்டபோது தான் ரூ.130/- வைத்துள்ளதாக தெரிவித்தார். அவர் ரூ.200/- கொண்டு வந்ததாகவும், அதில் ரூ.70/- காபி வாங்கிவர தனது டிரைவர் திரு.மணி அவர்களிடம் தான் கொடுத்து அனுப்பியதாகவும், மீதிப்பணம் தன்னிடம் உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் இரண்டு நபர்கள் இருப்பதாகவும், அவர்கள் பெயர் 1) திருமதி.பி.ஜெயந்தி, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I என்ற நிலையில் பணி செய்து வருவதாகவும் மற்றும் திரு.கார்த்திக் ராஜா, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-II என்ற நிலையில் பணி செய்து வருவதாகவும், இவர்களது பணியானது ஓட்டுநர் உரிமம் தொடர்பான அனைத்து பணிகளும் மேற்கொள்வது, புதிய வாகன பதிவு, வாகன ஆய்வு செய்வது மற்றும் விபத்து வாகனங்கள் ஆய்வு செய்வது, வாகன சோதனை செய்வது போன்ற பணிகளாகும் என்று கூறினார். திருமதி.ஜெயந்தி அவர்கள்17.06.2026 ஆம் தேதியன்று பணிக்கு வந்தார் என்றும். 18.06.2026 தேதியில் அவர் தற்செயல் விடுப்பில் இருப்பதாக வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்கள் தெரிவித்தார். மற்றொரு மோட்டார் வாகன ஆய்வாளரான திரு.கார்த்திக் ராஜா அவர்கள் மாற்று பணியாக சென்னையில் துறை பயிற்சியாக சென்றுள்ளதாக தெரிவித்தார். இதன் தொடர்ச்சியாக அலுவலகம் முழவதும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதை போல் அங்கு பணியில் இருந்த பணியாளர்களை தனி தனியாக சோதனை செய்ப்பட்டது. அதே போல் அலுவரகத்திற்கு உள்ளே இருந்த புரோக்கர்கள் மற்றும் பயனாளர்களையும் தனி தனியாக சோதனை செய்யப்பட்டது. சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ பொருளோ கிடைக்கவில்லை. பின்னர் ஒருநபர் மெயின் கதவு வழியாக உள்ளே வந்து தான் வட்டார போக்குவரத்து அலுவலரின் ஓட்டுநர் என்று தெரிவித்து தனது பெயர் மணி என்றும் தெரிவித்தார். அவர் வெளியில் சென்று காபி வாங்கிவர சென்றதாக கூறினார். அதனால் அங்கேயே நிறுத்தி சோதனையிட அவரிடம் எந்த பணமும் இல்லை என்று தெரியவந்தது. பின்னர் அவர் வந்த TN 30 BL 2917 Suzuki Access என்ற இருசக்கர வாகனத்தை பற்றி விசாரிக்க. அந்த வாகனம் தன்னுடையது இல்லை என்றும் புரோக்கர் ரஞ்சித் என்பரது என்றும் கூறினார் அதனால் அந்த வாகனத்தை அருகில் சென்று, சாட்சிகள்

முன்னிலையில் சோதனை செய்ய சீட்டிக்கு அடியில் பிளாஸ்டிக் கவரில் ரூ.4,500/- (500 ரூபாய் நோட்டுக்கள் 3ம், 100 ரூபாய் நோட்டுக்கள் 30ம்) இருந்தது. அந்த தொகை குறித்து அவரிடம் கேட்டபோது, அதுபற்றி தனக்கு தெரியாது என்றும். அந்த பணம் புரோக்கர் ரஞ்சித் அவருடையதாக இருக்கலாம் என்றும் தெரிவித்தார். அவர் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு உதவியாக இருக்கிறார் என்றும். அவருக்கு புரோக்கராக செயல்படுகிறார் என்றும் தெரிவித்தார். அந்த பணம் குறித்து விசாரிக்க வேண்டி மேற்படி வாகன உரிமையாளருக்கு போன் மூலம் தொடர்புகொண்டபோது அவரது போன் அனைத்து வைக்கப்பட்டு இருந்தது. அதனால் அந்த பணமானது சந்தேகத்திற்கிடமான வகையிலும், மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.பி.ஜெயந்தி அவர்களுக்கு அனுகூலமாக கொடுக்க வாய்ப்புள்ளதாகவும் கருதி மேற்படி தொகையை எங்களின் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. மேலும், சோதனையின்போது ரூ.4,500/-ஐ தவிர வேறு பணமோ, பொருளோ எதுவும் காணப்படவில்லை. திடீர் சோதனைக் குழுவினர் வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் மோட்டார் வாகனம் மற்றும் கார் உரிமம் பெறுவது தொடர்பாக 1) 17.06.2026-ம் தேதி 25 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அதற்கான வேலையை மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் மூலம் முடிக்கப்பட்டுள்ளது. 2) 1.05.2026 முதல் 18.06.2026 தேதி வரை பர்மிட் அறிக்கை பெறப்பட்டது. அதை பார்வையிட்டதில் Stage Carriage Permit -7, Contract Carriage Permit-146, Private Service Vehicle Permit-2, Goods Permit-199, National Permit-58 என அனைத்து வேலைகளும் முடிக்கப்பட்டதாக அறிக்கை பெறப்பட்டது. அதே போல் 3) 17.06.2026 ஆம் தேதி Permit Report பெறப்பட்டு அதனை பார்வையிட்டதில் Contract Carriage Permit-9, Goods Permit-7, National Permit-4 ஆகியவைகளின் வேலைகளை முடிக்கப்பட்டதாக அறிக்கை உள்ளது. ஆன்லைன் றுநடிளவைந வேலை செய்யாததால், 17.06.2026-ம் தேதி உரிமம் வழங்கவில்லை 4) 18.06.2026 ஆம் தேதி இதே போன்று 2-விண்ணப்பங்கள் பெறப்பட்டதாகவும், அவற்றில் 4 விண்ணப்பங்கள் பணி முடித்துவிட்டதாகவும், இரண்டு விண்ணப்பங்கள் (மகாலட்சுமி எம், கார்த்திக் எம்) நிலுவையில் உள்ளதாகவும் வட்டார போக்குவரத்து அலுவலர் தெரிவித்தார். அதுசம்மந்தமாக ஆன்லைனில் விண்ணப்பத்தின் தற்போதைய நிலை குறித்து பிரிண்ட் எடுத்து சான்றொப்பம் செய்து விசாரணைக்காக வழங்கினார். மேலும், சோதனையின்போது, அலுவலக வருகை பதிவேடு, அனுமதி பதிவேடு, டீழவெழரெ (நுடஉழவ) வருகை பதிவேடு, இரவு காவலர் வருகை பதிவேடு, தாமத வருகை பதிவேடு, அலுவலக பணியாளர்களின் பண இருப்பு பதிவேடு ஆகியற்றை கண்காணிப்பாளர் திரு.இம்ரான் ஷெரீப் அவர்கள் மூலமாக எடுத்து வரச்சொல்லி பரிசீலனை செய்யப்பட்டது. அந்த சமயத்தில் ரகசிய தகவலின் பேரில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தினை ஒட்டி அமைந்துள்ள கந்தம்பட்டி பைபாஸிலிருந்து சிவதாபுரம் செல்லும் சாலையில் தெற்கு பக்கம்

அமைந்துள்ள வினாயகா வாகன பரிசோதனை மையம், ஸ்ரீமணிகண்டன் ஜெராக்ஸ் கடை, ஸ்ரீசரவணா ஜெராக்ஸ் கடை, S N R Online Centre, APM Computer Centre, சீனிவாசன் என்பவரின் Computer Centre> KUfd; Online Workds, ஜெய் ஜெராக்ஸ் கடை, G.R Auto Consulting, Dinesh Online Works kw,Wk; SURYA COMPUTERS போன்ற கடைகளில் வட்டார போக்கு வரத்து அலுவலகத்திற்கு வரும் வாடிக்கையாளர்களை மேற்படி கடைக்கு அனுப்பி அங்கு பதிவு செய்ய சொல்லி, அந்த கடையில் உள்ள புரோக்கர்கள் மூலம் கையூட்டு பெறுவதாக கிடைத்த நம்பகத்தகுந்த தகவல் கிடைத்தது. தகவலின்பேரில் நாங்களும் காவல்குழுவினர்களை அழைத்துக்கொண்டு மாலை 16.45 மணிக்கு அனைத்து கடைகளையும் ஒவ்வென்றாக விசாரணை செய்து கொண்டு வரும் போது மேற்கு பார்த்தவாறு அமைந்துள்ள SURYA COMPUTERS RTC ONLINE WORKS க்கு சென்று அங்கு ஆஜரில் இருந்த திரு.செ.சுதர்சன், த/பெ.செல்லப்பன், எண்.3/63,கொனேரிகரை, கந்தம்பட்டி, சேலம் மாவட்டம் மற்றும் திரு.மு.வெங்கடேஷ், த/பெ.முருகேசன், எண்.253/138, மாரியம்மன் கோவில் தெரு, அரியாகவுண்டம்பட்டி, சேலம் மாவட்டம் ஆகியோரிடம் விசாரணை மேற்கொண்டதில் அவர்கள் இருவரும் சேர்ந்து இந்த கடையை நடத்தி வருவதாகவும், அவரவர்களுக்கு வரும் ஆர்.டி.ஒ அலுவலக வேலைகளை செய்து வருவதாகவும் தெரிவித்தனர். அவர்களிடம் ஆர்.டி.ஒ அலுவலக சம்மந்தப்பட்ட பணிக்கு பணம் எதுவும் வசூல் செய்து வைத்துள்ளீர்களா? என கேட்டபோது, மேற்படி திரு.சுதர்சன் அவர்கள் அவரது இருக்கையின் மேஜை டிராயரிலிருந்து பணத்தை இரண்டு கத்தைகளாக மடித்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எங்களின் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் அதில் ஒரு கத்தையில் ரூ.12,600/- (500x14, 100x23, 50x66) இருந்தது. மற்றொரு கத்தையில் ரூ.30,500/- (500x54, 100x2, 20x121, 10x66) இருந்தது. அவரிடம் இதுகுறித்து கேட்டபோது அவை 17.06.2026 மற்றும் 18.06.2026 ஆகிய தேதிகளில் ஆர்.டி.ஒ அலுவலக பணிகளுக்கு ஆன்-லைன் மூலம் கட்டணம் செலுத்தியதற்காகவும், தனிப்பட்ட முறையில் ஏற்கனவே எங்களுக்கு முடித்துக்கொடுத்த வேலைக்காக மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு கொடுக்க வைத்துள்ள தொகை என்றும் தெரிவித்தார். மேலும் அந்த பணம் வாகன உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்டது என்று தெரிவித்தார். அவர் கட்டணம் செலுத்திய விபரங்களையும் அவரது SBI வங்கி கணக்கு எண்.35594107561 பரிவர்த்தணை விபரங்களை பார்வையிட்டதில் கடந்த 17.06.2026 மற்றும் 18.06.2026 ஆகிய தேதிகளில் ரூ.27,700/- கட்டணமாக செலுத்தியுள்ளார். எனவே ஒரு கத்தையில் இருந்த ரூ.30,500/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மற்றொரு கத்தையிலிருந்த தொகை ரூ.12,600/- தொடர் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களால் எங்களின் முன்னிலையில் செயல்முறை நடவடிக்கையின் மூலம்

கைப்பற்றிக்கொள்ளப்பட்டது. தொடர்ந்து மேற்படி திரு.வெங்கடேஷ் அவர்கள் அவரது இருக்கையின் பேனல் டிராயரிலிருந்து பணத்தை இரண்டு கத்தைகளாகவும், அவரது பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.1,900/- மடித்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எங்களின் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் அதில் ஒரு கத்தையில் ரூ.33,000/- (500x45, 200x21, 100x33) இருந்தது. மற்றொரு கத்தையில் ரூ.10,000/- (100x6, 50x68) இருந்தது. அவரிடம் இதுகுறித்து கேட்டபோது அவை 17.06.2026 மற்றும் 18.06.2026 ஆகிய தேதிகளில் ஆர்.டி.ஒ அலுவலக பணிகளுக்கு ஆன்-லைன் மூலம் கட்டணம் செலுத்தியதற்காகவும், தனிப்பட்ட முறையில் ஏற்கனவே எங்களுக்கு முடித்துக்கொடுத்த வேலைக்காக மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு கொடுக்க வைத்துள்ள தொகை என்றும் தெரிவித்தார். மேலும் அந்த பணம் வாகன உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்டது என்று தெரிவித்தார். அவர் கட்டணம் செலுத்திய விபரங்களையும் அவரது SBI வங்கி கணக்கு எண்.42014857843 பரிவர்த்தனை விபரங்களை பார்வையிட்டதில் கடந்த 17.06.2026 மற்றும் 18.06.2026 ஆகிய தேதிகளில் ரூ.10,000/- கட்டணமாக செலுத்தியுள்ளார். எனவே ஒரு கத்தையில் இருந்த ரூ.10,000/- மற்றும் அவர் கை செலவுக்காக வைத்திருந்ததாக கூறியதை ஏற்றுக்கொண்டு ரூ.1,900/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மற்றொரு கத்தையிலிருந்த தொகை ரூ.33,000/- தொடர் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களால் எங்களின் முன்னிலையில் செயல்முறை நடவடிக்கையின் மூலம் கைப்பற்றிக்கொள்ளப்பட்டது. மேலும் அவர்களின் டேபிள் மேலிருந்த ஆவணங்களை பற்றி அவர்களிடம் விசாரித்தபோது புதிதாக லைசன்ஸ் பெற வரும் வாடிக்கையாளர்களிடம் ஆன்லைனில் செலுத்துவதற்கு பணம் பெற்றுக்கொண்டு புதிதாக லைசன்ஸ் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு அதற்கான பதிய டிரைவிங் லைசன்ஸ் அட்டை அவர்களது முகவரிக்கு சென்ற பிறகு அந்த ஒரிஜினல் லைசன்ஸ் அட்டையை டியூப்ளிகேட் அட்டை போடுவதற்கு தங்களிடம் கொடுத்ததாகவும், அதனை பிரிண்ட் போட்டு டியூப்ளிகேட் கார்டுகள் 1) திரு.கோகுல்ராஜ் என்பவரின் டிரைவிங் லைசன்ஸ் எண். TN30 20260002373 ன் இரண்டு அட்டைகள், 2) திரு.மோகன்ராஜ் குமரேசன் என்பவரின் டிரைவிங் லைசன்ஸ் எண். TN30 20260002458 ன் இரண்டு அட்டைகள், 3) திரு.மு.சாமுவேல் என்பவரின் டிரைவிங் லைசன்ஸ் எண். TN01 19910009382 ன் இரண்டு அட்டைகள், மற்றும் 4) திரு.பிரணய் அணில்குமார் ஜெய்ன் என்பவரின் டிரைவிங் லைசன்ஸ் எண். TN30 20260002372 ன் இரண்டு அட்டைகள் ஆகியவற்றை வைத்திருந்ததாக தெரிவித்தனர். அதனையும் எங்களின் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. எனவே மேற்படி தொகைக்கு பொறுப்பானவர்களான 1) திருமதி.ஜெயந்தி, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I 2) திரு.சுதர்சன் 3)திரு.வெங்கடேஷ் 4) திரு.ரஞ்சித்

ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxx19.06.2026 (P.Singaravelan)

Sir, Received the complaint at 15.00 hrs today on 19.06.2026 and registered a case in Salem Vigilance & Anti-Corruption Cr.No.08/AC/2026 u/s Sec 7 (a) and 7 A of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 on 19.06.2026 at 15.00 hrs.

Original FIR along with original computer typed complaint of Tr.Singaravelan, Deputy Tahsildar(Election), Salem. West Taluk Office. Salem Districts is submitted to the Hon'ble Court of the Principal District and Sessions Judge. Salem and other copies were submitted to the officers concerned.

19.6.26

(R.D.Ravikumar)
Inspector of Police,
Vigilance and Anti Corruption,
Salem.